**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II, PONNERI**

**Case No. : C. C. No. 12/2015**

**Prosecution Witness : P.W. 1**

| | | | |
|---|---|---|---|
| Name | : நாகேஸ்வர ராவ் | | : |
| Father / Husband Name | : | | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Oaths Act 1969 (Central Act 44 of 1969) on the day of 31/07/2025

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி (எதிரிகள் தரப்பில்)**

என் குடும்பத்தில் மொத்தம் எத்தனை நபர்கள் என்றால், என் அம்மா மற்றும் சகோதரர்கள் என்னையும் சேர்த்து மூவர் ஆவோம். எனக்கு நாலூர் மற்றும் மீஞ்சூர் கிராமத்தில் எவ்வளவு நிலம் இருந்தது என்றால், மொத்தம் 7 ஏக்கர் 50 1/4 சென்ட் ஆகும். அது ஒரே பகுதியில் உள்ளது. அந்த சொத்து யாருக்கு சொந்தம் என்றால், என் தந்தைக்கு சொந்தமானது ஆகும். இந்த வழக்கை தனிப்பட்ட வகையில் நான் தான் போட்டிருக்கிறேன் என்றால், சரிதான். என்னுடைய குடும்ப நபர்கள் அனுமதியுடன் தான் தாக்கல் செய்திருக்கிறேன். அவ்வாறு அனுமதி கொடுத்ததாக சொல்வதற்கு கடிதம் ஏதேனும் அவர்களிடமிருந்து பெற்றிருக்கிறேனா என்றால், இல்லை. யாருடைய அனுமதியும் இல்லாமல் நான் மட்டுமே எதிரிகள் மீது வழக்கு போட்டிருக்கிறேன் என்றால் சரியல்ல.

மேற்படி சொன்ன சொத்தை நான் வேறு யாருக்கும் விற்பனை செய்ய ஒப்பந்தமோ, அல்லது வேறு ஆவணம் போட்டேனா என்றால், இல்லை. கே.எஸ். ராஜகுரு மற்றும் எஸ். ராஜகுரு என்பவர்களை எனக்கு தெரியுமா என்றால்,

SHANKARAN MANJULA Digitally signed by SHANKARAN MANJULA

தெரியாது. குருநாதன் என்பவரை தெரியுமா என்றால், தெரியும். குருநாதனுக்கும் எனக்கும் எவ்வாறு பழக்கம் ஏற்பட்டது என்றால், நான் மேற்படி சொன்ன நிலத்தில் Approval பெறுவதற்காக பவர் வழங்கியிருந்தேன். அந்த பவர் பத்திரத்தில் மேற்படி சொன்ன நிலத்தில் விற்பனை ஒரு செண்ட் ரூ.5,000/– வீதம் செய்வதற்காக நானும் என் தந்தையும் கையெழுத்திட்டு, ரூ.3 லட்சம் அட்வான்ஸ் தொகை பெற்றோம் என்றால் சரிதான். அந்த முதல் பவர் ஒப்பந்தமானது, எங்களுக்கிடையே ஏற்பட்ட பிரச்சனையால் ரத்து செய்யப்பட்டு, பின்னர் இரண்டாவதாக ஒரு ஒப்பந்தம் 27.09.2000ல் போட்டோம் என்றால் சரிதான். அப்போது அதே நிலத்திற்கு ஒரு செண்டுக்கு ரூ.7,000/– என்று குருநாதனுக்கும் எனக்கும் மீண்டும் பிரச்சனை ஏற்பட்டது என்றால் சரிதான். இரண்டாவது ஒப்பந்தம் போடும் சமயத்தில் குருநாதனிடமிருந்து நான் அட்வான்ஸ் தொகை பெற்றுக் கொண்டேனா என்றால், இல்லை. நான் சொல்வது தவறு என்றாலும், அட்வான்ஸ் தொகை பெற்றேன் என்றாலும், நினைவில்லை. மீண்டும் இரண்டாவது ஒப்பந்தத்தை நான் ரத்து செய்து விட்டேன் என்றால், சரிதான். இது சம்மந்தமாக நான் குருநாதனுக்கும், குருநாதன் எனக்கும் மாறி மாறி வழக்கறிஞர் அறிவிப்புகள் அனுப்பிக் கொண்டோம் என்றால் சரிதான். அதன்பின்னரும் நான் குருநாதனிடம் இதே நிலம் சம்மந்தமாக 3வது ஒப்பந்தத்தில் 13.03.2005ல் ஈடுபட்டேன் என்றால் சரிதான். தற்போது ஒரு செண்டுக்கு ரூ.17,000/– என்று 3வது ஒப்பந்தத்தில் உயர்த்தியிருக்கிறேன் என்றால் சரிதான். அப்போதும் நான் குருநாதனிடம் அட்வான்ஸ் தொகை பெற்றிருக்கிறேன் என்றால் இல்லை. நான் சொல்வது தவறு என்றாலும், அவரிடம் 3வது ஒப்பந்தம் போடும் போது அட்வான்ஸ் வாங்கியிருக்கிறேன் என்றால் சரியல்ல. 3வது ஒப்பந்தத்தையும் நான் ரத்து செய்து விட்டேன் என்றால், சாட்சி தற்போது மாற்றி அது ஒப்பந்தம் கிடையாது. பவர் பத்திரம் என்று சொல்கிறார். தவறான தகவல் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் பணத்தையும் பெற்றுக் கொண்டு நிலத்தையும் ஒப்படைக்காமல் பிரச்சனை செய்ததற்கான குருநாதன் என் மீது 05.08.2006ல் காவல் துறையில்

SHANKARAN MANJULA Digitally signed by SHANKARAN MANJULA

புகார் கொடுத்தார் என்றால், சரிதான். 1ம் எதிரியிடம் நான் பிற்பாடு அதே நிலத்திற்காக ரூ.30 லட்சம் பணம் பெற்றேன் என்றால் சரிதான். அதனைப் பெறும் போது சொத்து சம்மந்தமாக அனைத்து அசல் ஆவணங்களையும் கொடுத்தேன் என்றால் சரிதான். மேற்படி 30 லட்சம் ரூபாய் தொகைக்கு வட்டி 3 சதவீதம் தருவதாக கூறினேன் என்றால் சரிதான். மேற்படி தொகை அசல் மற்றும் வட்டியை 6 மாதத்தில் திருப்பி தருவதாக மசா.ஆ.1 அடமானப் பத்திரம் போட்டுக் கொண்டேன் என்றால் சரிதான்.

மேற்படி சொன்ன சொத்தில் ஒரு சொத்து 5.74 சென்ட் மற்றொரு சொத்து 1.76 சென்ட் என்றால் சரிதான். நான் சொன்னது போல் வட்டி என்னால் முறையாக செலுத்த முடியாததால் மீண்டும் 1ம் எதிரியிடம் மேற்படி சொத்து குறித்து ஒரு விற்பனை ஒப்பந்தம் 21.06.2005ல் போட்டுக் கொண்டேன் என்றால், சரிதான். வட்டி சரியாக தான் செலுத்தி வந்தேன். அந்த விற்பனை ஒப்பந்தத்தில் எவ்வளவு தொகை நான் பெற்றேன் என்றால், ரூ.20 லட்சம் பெற்றுக் கொண்டு பவர் பத்திரம் கொடுத்தேன்.

குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.

SHANKARAN MANJULA Digitally signed by SHANKARAN MANJULA